Bahagian A
(30 நிமிடம்)

புறவயக் கேள்விகள் – செய்யுளும் மொழியணியும்
(20 புள்ளி)

வினாக்களுக்கு **A,B,C,D** எனும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. தூண்டல் பகுதி கொடுக்கப்பட்டிருந்தால் அதிலுள்ள விவரங்களைக் கூர்ந்து கவனித்து வினாக்களுக்கு **மிகச் சரியான** விடையைத் தெரிவு செய்க.

கேள்வி 1 – 3 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான **இரட்டைக்கிளவியைத்** தெரிவு செய்க.

1. ஆண்டுதோறும் பெருநாள் காலங்களில் சமையல் பொருள்களின் விலை __________வென உயர்ந்து கொண்டே செல்வது கண்கூடு.

A விறுவிறு | B கடகட
C கிடுகிடு | D சடசட

2. வேலை நேரத்தின்போது, __________வென பேசிக்கொண்டிருந்த பணியாளர்கள் மேலாளரிடம் திட்டு வாங்கினர்.

A பளபள | B கடகட
C விறுவிறு | D தொணதொண

3. பூந்தோட்டத்தில் அனைத்துப் பூச்செடிகளும் ___________வென வளர்ந்து பூத்துக் குலுங்கியது வழிப்போக்கர்களின் கண்களை ஈர்த்தன.

A தளதள | B திமுதிமு
C பளபள | D கிடுகிடு

கேள்வி 4 – 6 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான **இணைமொழியைத்** தெரிவு செய்க.

4. கொடுக்கப்பட்டுள்ள படத்திற்கு ஏற்ற **இணைமொழியைத்** தேர்ந்தெடுக்கவும்.




A. அடக்க ஒடுக்கம் | B. சட்ட திட்டம்
C. ஆடிப்பாடி | D ஈடு இணை

5.

நாம் ____________________________ இன்றி வாழ நல்ல உணவு பழக்கத்தைக் கையாள வேண்டும்.

A. நோய் நொடி
B. ஊண் உறக்கம்
C. நாணிக்கோணி
D வாடி வதங்கி

6.

வறுமை கோட்டின் கீழ் இருக்கும்____________________________ களுக்கு அரசாங்கம் உதவ முன்வந்துள்ளது.

A. ஏழை எளியவர்
B. கள்ளங்கபடு
C. உண் உறக்கம்
D. சீரும் சிறப்பும்

கேள்வி 7 – 9 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான **உவமைத்தொடரைத்** தெரிவு செய்க.

7. "புதிதாக இல்லறத்தில் இணைந்திருக்கும் நீங்கள் இருவரும் ________________ என்றென்றும் சேர்ந்து வாழ வாழ்த்துகிறேன்!" என்றார் அப்பெரியவர்.

A. புற்றீசல் போல
B. பசுமரத்தாணி போல
C. மலரும் மணமும் போல
D. தாயைக் கண்ட சேயைப் போல

8. கொடுக்கப்பட்டுள்ள படத்திற்கு ஏற்ற **உவமைத்தொடரைத்** தேர்ந்தெடுக்கவும்.



A. புற்றீசல் போல
B. கும்பிட போன தெய்வம் குறுக்கே வந்தது போல
C. ஊமைக் கண்ட கனாப் போல
D. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல

9. மாறன் எஸ்.பி.எம் தேர்வில் முதல் நிலையில் தேர்ச்சிப் பெற்றதால் அவன் மேற்கல்வியைத் தொடர அரசாங்கத்திடமிருந்து உபகாரச் சம்பளம் கிடைத்தது.. இந்நிலை________________________ இருந்தது.

A. தாயைக் கண்ட சேயைப் போல
B. உள்ளங்கை நெல்லிக்கணி போல
C. இலைமறை காய் போல இருந்தது
D. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல

கேள்வி 10-12 வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.

10. கீழ்க்காணும் சூழலுக்கு ஏற்ற **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.

| |
|---|
| புதிதாகத் தொழில் தொடங்கி, அத்தொழிலில் பெரும் நஷ்டத்தை அடைந்த திரு அமுதனுக்கு அவரது உயிர் தோழனான திரு வேலன் தக்க சமயத்தில் உதவி செய்தார். |

A. வீடு வாசல்
B. வாழையடி வாழை
C. தலை வணங்குதல்
D. தோள் கொடுத்தல்

11. படத்திற்கு ஏற்ற **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.




A. தலைவணங்குதல்
B. உச்சிக் குளிர்தல்
C. அளவுளாவுதல்
D. தோள் கொடுத்தல்

12. கீழ்க்காண்பனவற்றுள் சரியான பொருள் கொண்ட **மரபுத்தொடரைத்** தெரிவு செய்க.

A. ஈயாடவில்லை – அவமானம்

B. கானல் நீர் – நிறைவேறிய எண்ணம்

C. இடித்துரைத்தல் – மென்மையாகக் கூறுதல்

D. உடும்புப் பிடி - கருத்தில் உறுதியாக இருத்தல்

13. கீழ்க்காணும் **பழமொழிக்கேற்ற** சரியான பொருளைத் தெரிவு செய்க.

| எறும்பு ஊரக் கல்லும் தேயும் |
|---|

A. தொடர்ந்து ஒரு செயலைச் செய்து வந்தால் நாளடைவில் வெற்றி பெறும்.

B. தினமும் ஒரு செயலை விடாமுயற்சியோடு செய்து வந்தால் நமக்கு நன்மை பயக்கும்.

C. ஒவ்வொரு நாளும் ஒரு செயலைச் செய்து வந்தோம் என்றால் அது கடினமாகத் தெரியாது.

D. தொடர்ந்து ஒரு செயலைச் செய்து வந்தால் எவ்வளவு கடினமாக இருந்தாலும் நாளடைவில் எளிதாகிவிடும்.

14. கீழ்க்காணும் வாக்கியங்களில் சரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ள **பழமொழியைக்** கொண்ட வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது போல வேலன் பல நூல்களைக் கற்று அறிஞன் ஆனான்.

B. ஒரு காசு பேணின் இரு காசு தேறும் என்பதற்கேற்ப கந்தன் பணத்தைச் செலவு செய்து வருகின்றான்.

C. கண்டதைக் கற்க பண்டிதன் ஆவான் என்பதுபோல பரதன் பல கலைகளைக் கற்று இன்று வாழ்க்கையில் முன்னேறினான்.

D. ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு என்பதுபோல சங்கீதா பரதக்கலையில் முழு நேரத்தைச் செலவு செய்தாலும் பிதி3 தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்றாள்.

15. கீழ்க்காணும் **பழமொழிக்கு** ஏற்ற சரியான பொருளைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

A. மந்திரத்தால் மாங்காய் விழுந்திடுமா?
வாழ்க்கையில் நாம் நினைத்ததை அடைய தினமும் இறைவனை வணங்க வேண்டும்.

B. இளமையில் சோம்பல் முதுமையில் மிடிமை
இளமையில் சோம்பலோடு இருப்பவர்கள் முதுமையில் வெற்றி பெறுவார்கள்.

C. அடாது செய்பவன் படாது படுவான்.
தகாத செயல்களைச் செய்பவர்கள் வாழ்க்கையில் செல்வங்களை இழந்து துன்பப்படுவார்கள்.

D. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
உயர்ந்த பண்புள்ளவர்கள் சிறந்த காரியங்களையே செய்வார்களேயின்றி எந்நிலையிலும் தங்களுக்கு இழிவு தரக்கூடிய காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

கேள்வி 16 முதல் 18 வரை **திருக்குறள்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

16. கீழ்க்காணும் **திருக்குறளில்** விடுபட்ட சொல்லைத் தெரிவு செய்க.

**இழுக்கல் உடையுழி ____________ அற்றே**

**ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.**

A. ஊற்றுக்கோல் B. ஊக்கம்

C. செங்கோல் D. ஞாலம்

17. கொடுக்கப்பட்டுள்ள **திருக்குறளுக்குப்** பொருத்தமான விளக்கத்தைத் தெரிவு செய்க.

**சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**

**சொல்லிய வண்ணம் செயல்.**

A. செய்வது சுலபம், சொல்வது கடினம்.

B. சொல்வது சுலபம், செய்வது கடினம்.

C. கொடுத்த வாக்கினைக் காப்பாற்ற வேண்டும்.

D. செய்த உதவியை சொல்லிக்காட்டக் கூடாது.

18. கீழ்க்காணும் **திருக்குறளின்** விடுபட்ட அடியைத் தெரிவு செய்க.

**உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**

________________________________

A. ஊக்கம் உடையவர் கற்று.

B. உடைவர் வல்லார்ப் பெறின்.

C. ஊக்கம் உடையோர் சொல்.

D. உடையது உடையரோ மற்று.

கேள்வி 19 முதல் 20 வரை **செய்யுள்** தொடர்பான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

19. கீழ்க்காணும் செய்யுளில் கருமையாக்கப்பட்ட வரியின் **பொருளைத்** தெரிவு செய்க.

> **எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு**
> **மக்கட் பிறப்பில் பிறிதில்லை** – அப்பிறப்பில்
> கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
> நிற்றலும் கூடப் பெரின்.

A. பிறப்பும் இறப்பும் வாழ்க்கையின் இயல்பு.
B. எந்த பிறவியிலும் மனிதனாகப் பிறக்க வேண்டும்.
C. மனிதனாகப் பிறக்க அருந்தவம் புரிந்திருக்க வேண்டும்.
D. உலகில் மனிதப் பிறப்பைவிடச் சிறந்த பிறப்பு வேறொன்றுமில்லை.

20. கீழ்க்காணும் படங்களுக்கு ஏற்ற **செய்யுளைத்** தெரிவு செய்க.



A. விறகில் தீயினன் பாலில் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

**B.** எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு
மக்கட் பிறப்பில் பிறிதில்லை – அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெரின்.

**C.** வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய
சுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று

**D.** மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்-மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு